**<u>DEPOSITION OF WITNESS</u>**

**In the court of Sub Court, Eraniel**

**S.C.No. 137/2017**

**Prosecution Witness – PW 6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஆதிலிங்க போஸ் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.11.2025.

(A1 and A2 are absent. **Petition U/s.355 BNSS** is filed and allowed).

(Accused Present).

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது சிவகங்கை மாவட்டம், எஸ்.எஸ் கோட்டை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு மணவாளகுறிச்சி வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது, மண்டைகாடு காவல் நிலைய குற்ற எண்.31/2014 சட்ட பிரிவுகள் 294 b, 353, 307, 379 IPC and Sec 21 of Mines and minerals act ஆக பதிவு செய்யப்பட்டிருந்த வழக்கை 05.05.2014 அன்று புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு , அன்று இரவு 10 மணிக்கு சம்பவ இடமான கூட்டுமங்கலம், விவேகானந்த பள்ளி முன்பு சென்று சாட்சிகள் விஷ்ணு, மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் <u>அ.சா.ஆ–5</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் உதவி ஆய்வாளர் ராஜய்யா, சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயகுமார், தலைமை காவலர் ரூபன் ஜெயதிலக், விஷ்ணு , மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகள் சுபாஷ் மற்றும் சந்திரபாபு ஆகியோர்களை தேடிவந்த நிலையில் 20.05.2014ம் தேதி மதுரை உயர் நீதிமன்ற கிளையில் அவர்கள் முன்ஜாமீன் பெற்றிருந்தார்கள். வழக்கில்

கைபற்றப்பட்ட கடல் மணலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு 13.06.2014 ம் தேதி மணலை வட்டாட்சியர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அத்தாட்சி பெறப்பட்டு படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த படிவம் 91 அ.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி சிறப்பு உதவியாளர் வேணுகோபாலை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையை முடித்து 19.02.2015 ம் தேதியன்று எதிரிகள் சுபாஷ் மற்றும் சந்திரபாபு ஆகியோருக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை இரணியர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் புகார்தாரர் கொடுத்த புகார் மனுவோ, புகார் வாக்குமூலமோ முதல் தகவல் அறிக்கையுடன் நீதிமன்றத்தில் அனுப்பபடவில்லை என்றால், சரிதான். 05.05.2016 அன்று அ.சா.1 ராஜய்யன் தவிர வேறு அதிகாரிகளும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுதிபடைத்தவர்களாக, மண்டைகாடு காவல் நிலையத்தில் பணியில் இருந்தார்கள் என்றால், சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மாதிரி குற்ற இறுதி அறிக்கையில் வழக்கின் சம்பவ இடம் குளச்சல் – நாகர்கோவில் சாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த சாலையில் கூட்டுமங்கலம் . அந்த சாலையில் கூட்டுமங்கலத்திற்கு கிழக்கே பரபற்று பிள்ளையார் கோவில் உள்ளது என்றால், சரிதான். மேற்கே மண்டைகாடு புதூர் என்ற ஊர் உள்ளது என்றால், சரிதான். மண்டைகாடு அம்மன் கோவில் முன் கிழக்காக செல்லும்ரோடு படர்நிலத்திற்கு செல்கிறது என்றால், சரிதான். மண்டைகாடு – படர்நிலம் ரோடும், நாகர்கோவில் – குளச்சல் ரோடும் வேறு வேறு சாலைகள் என்றால், சரிதான். நாகர்கோவில் – குளச்சல் சாலையில் விவேகானந்தா பாடசாலை ( பள்ளி) இல்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கின் புகார் மற்றும் அத்தாட்சியில் எதிரிகள் கண்டால்

தெரியும் நபர்கள் என்று கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். சாட்சிகள் 1 முதல் 3 வரையுள்ளவர்களின் விசாரணையில், யார் மூலமாக அவர்களுக்கு எதிரிகளின் பெயர் விபரங்கள் தெரியவந்தன என்பது பற்றி துலங்காது என்றால், சரிதான். அ.சா.1 சாட்சியின் விசாரணையில், எனது விசாரணை முடியும் வரை 1 மற்றும் 2 எதிரிகள் பற்றிய விபரம் தனக்கு தெரியாது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், சரியல்ல. எதிரிகள் யார் என்ற அடையாளம் காட்டுவதற்கு அ.சா.1 மற்றும் ஆகீயோரின் முன்னிலையில் அடையாளம் காட்டப்படவில்லை என்றால், சரிதான். கண்டால் தெரியும் எதிரிகள் என்றால், அந்தஎதிரிகள் நீதிமன்றத்திற்கு முன்னால் அடையாளம் காட்டப்படவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். பொதுவாக mines and minerals act ன் படி பொருட்கள் கைபற்றுவதற்கு, காவல் ஆய்வாளருக்கு குறைவான பொறுப்பில் இருப்பவர்கள் செய்ய இயலாது என்றால், சரியல்ல. உதவி ஆய்வாளர் நிலையில் இருப்பவர்கள் அவ்வாறு பொருட்களை கைபற்றலாம். mines and minerals act ன் படி யாரிடமிருந்து பொருட்கள் கைபற்றப்பட்டதோ அவர்களிடமிருந்து கையொப்பம் பெறவேண்டும் என்றால், விபரம் எனக்கு தெரியும், ஆனால், கையொப்பம் பெறுவதற்குள் எதிரிகள் ஓடி தலைமறைவு ஆகிவிட்டார்கள். 1 முதல் 3 பட்டிகை சாட்சிகள் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் பணியில் இருந்தார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவர்கள் அந்த தேதியில் காவல் நிலைய பணியில் இல்லாத காரணத்தினால் தான் அவ்வாறு என்னால் ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை என்றால், சரியல்ல. அ.சா.1 ராஜய்யன் எனது விசாரணையில் டெம்போவில் ஆற்று மணல் கடத்தியதாக சொல்லவில்லை என்றால், சரிதான். அ.சா.2 ரூபன் ஜெயதிலக் எனது விசாரணையில் TN 75 F 0739 என்ற பதிவெண் கொண்ட டிம்போ வாகனத்தை தணிக்கை செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. அந்த விசாரணையின் அடிப்படையில் தாக்குவதற்கு பயன்படுத்திய கம்பிகளை கைபற்றுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்றால்,

சரிதான். வழககு சம்பவமே உண்மையில் நடக்கவில்லை என்பதால் தான் நான் அவ்வாறு கம்பிகளை கைபற்ற முயற்ச்சி எடுக்கவில்லை என்றால், சரியல்ல. அ.சா.4 வேணுகோபால் எனது விசாரணையில் தாசில்தாரிடம் மணலை ஒப்படைவு செய்வதற்கு, உதவி ஆய்வாளர் கொடுத்த கடவு சீட்டு அடிப்படையில் , மணலை கொண்டு சென்றுள்ளார். படிவம் 91 தயார் செய்யும்போது மணலுடன் கூடிய டிம்போ இருந்தது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் படிவம் 91ல் அ.சா.ஆ–7 ல் மணல் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் 3 புகைபடங்களில் சா.பொ.1ன் வரிசையில் மணல் இருந்ததாக துலங்கவில்லை என்றால், சரிதான். நான் குறிப்பிட்ட தேதியில் டெம்போவில் மணல் கடத்தியதாக ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், புகைப்படங்கள் தான் உள்ளன வேறு ஆவணங்கள் இல்லை. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகஜரில் சம்பவ இடத்தை அடையாளம் காட்டியது விஷ்ணு மற்றும் மணிகண்டன் என்று கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். அவர்கள் இருவரும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றால், சரிதான். அ.சா.1 மற்றும் 2 ஆகியோர், சம்பவத்தின்போது 2 எதிரிகளும் டிம்போவில் இருந்து ஒரே கதவு வழியாக இறங்கினார்களா, அல்லது அவர்கள் இருவரும் இரண்டு Door வழியாக இறங்கினார்களா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். அ.சா.2 ஜெயதிலக் விசாரணையில் முதலில் தாக்கியது சுபாஷ் என்ற விபரத்தை எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். எனது விசாரணையில் ஒருமுறைக்கு மேல் எதிரிகள், அ.சா.1யை தாக்க முயன்றதாக துலங்கவில்லை என்றால், சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் , எதிரிகள் கெட்டவார்த்தை பேசி அருவறுப்பு , அவமானம் ஏற்படுத்தியதாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வட்டாட்சியரிடம் டெமபோவில் இருந்த மணலை ஒப்படைத்து அத்தாட்சி பெற்றதாக எனது வழக்கு கோப்பில் ஆவணங்கள் மூலமாக துலங்காது என்றால், சரியல்ல. கனிமவளம்

சம்பந்தப்பட்ட வழக்கை தனிநபர் வழக்காக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரிதான். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்றால், சரியல்ல. நான் குறிப்பிட்ட நேரத்தில் எங்கள் காவல்நிலையத்தினர் வாகனத்தை தணிக்கை செய்யவும இல்லை, கைபற்றவும் இல்லை என்றால், சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக சட்டத்திற்கு புறம்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு , முறையாக புலன் விசாரணை செய்யாமல் ஒருதலைபட்டசமாக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**